1981 மே 12]

மல்லிக்கருகில் பழுதடைந்துள்ள பாலம்.

*வினா எண் 1069. திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சாத்தூருக்கும் திருவில்லிப்புத்தூருக்கும் இடையே பெருவழித்துறைக்குப் பாத்தியப்பட்ட சாலையில் மல்லிக்கு அருகில் பழுதடைந்து உள்ள பாலம் 1974-75-ஆம் ஆண்டு டெண்டர் விட்டும் வேலை இன்னும் நடைபெறாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி வேலையை காலதாமதம் செய்த ஒப்பந்தக்காரர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

(இ) எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டிற்கு காண்ட்ராக்ட் விடப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, (அ) வேலை முடிந்து போக்குவரத்துக்கு அந்தப் பாலம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) காலதாமதத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு தாக்கீதுகள் கொடுக்கப்பட்டதுடன் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

(இ) ரூ. 19,441.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமாக சாத்தூருக்கும் திருவில்லிப்புத்தூருக்கும் இடையே பெருவழித்துறைக்கு பாத்தியப்பட்ட மல்லிக்கு அருகில் உள்ள பாலமாகும். இந்த முக்கியமான சாலையில் உள்ள இந்தப் பாலம் கட்டுவதற்கு 7-8 ஆண்டுகள் ஆகியிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட முக்கியமான பாலமாக இருக்கின்ற இடங்களில் டெண்டர் விடாமல் அரசே அவற்றை கட்டுவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது 1974—இல் அங்கீகாரம் அளிக்கப்பட்டதாகும். அந்தப் பணி நின்றுவிட்ட காரணத்தால், வேலைகள் துவங்கப்பட காலதாமதம் ஆகிவிட்டது. தற்போது அந்த வேலைகள் முடிக்கப்பட்டு, போக்குவரத்தும் செல்வதால், அதற்காக நன்றி சொல்லும் கடமைப்பாட்டு உணர்வோடு மாண்புமிகு உறுப் பினர்கள் இருப்பார்கள் என்று நம்புகிறேன். இதுபோன்ற பாலங்கள் நல்ல முறையில் கட்டுவதற்கான திட்டங்களைத்தான் அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரையிலுள்ள பல்கலை நகரை நகரியமாக்குதல்

*வினா எண் 1070 திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

மதுரை பல்கலைக் கழகம் அமைந்துள்ள 'பல்கலை நகர் நகரியமாக (டவுன்ஷிப்) அறிவிக்கப்படுமா?